


**BEGINNER**

மாணவர் பயிற்சி கையேடு

பெயர்:

BEGINNER மாணவர் பயிற்சி கையேடு

# The RACE



1. இலக்கை நோக்கி ஓடு
2. பொறுமையோடு ஓடு
3. தைரியத்தோடு ஓடு
4. பாவத்தை விட்டு ஓடு
5. பெற்றுக்கொள்ளத்தக்க ஓடு
6. வாழ்ந்துகாட்ட ஓடு
7. ஜீவகிரீடத்தை பெற ஓடு

**RPM KIDZ**
Ilayarasanendal

# இலக்கை நோக்கி ஓடு




மத்தேயு. 14: 23 - 33



பேதுரு இலக்கை (இயேசுவை) நோக்கி நடந்தபோது, கடலிலும் தரையைப்போல நடந்தான். ஆனால் எப்பொழுது இலக்கை (இயேசுவை) மறந்து மற்றவற்றை பார்த்தானோ அப்பொழுது அவன் கடலில் மூழ்கினான். எனவே நாம் இலக்கை மாத்திரம் குறிக்கோளாக வைத்து ஓடினால் ஜெயத்தை பெற்றுக் கொள்ளலாம்.







மனப்பாட வசனம்

## பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

*பிலிப்பியர் 3:14*

**நீ வளர்ந்த பின் என்னவாக விரும்புகிறாய்?**

விருப்பமான கலரைத் தேர்ந்தெடுத்து வண்ணம் தீட்டவும்

.....................................





## ஜெபம்

**அன்புள்ள இயேசப்பா, நாங்கள் கேட்ட கதையின்படி இலக்கை நோக்கி ஓட உதவி செய்யுங்க.. ஆமென்.**




# பொறுமையோடு ஓடு

2 இராஜாக்கள்.2: 1 - 14



எலிசா எலியாவை பொறுமையோடு பின்பற்றி கிருபையை பெற்றுக் கொண்டான். அதேப்போல நாமும் தேவனை பொறுமையோடு பின்பற்றினால் அவரிடத்திலிருந்து புதிய கிருபைகளை பெற்றுக் கொள்வோம்.



மனப்பாட வசனம்

## நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

எபிரெயர் 12:1

## பொறுமை






**அன்புள்ள இயேசப்பா.. நாங்கள் கேட்ட கதையிலே எலிசா எலியாவை பொறுமையோடு பின்பற்றி கிருபையை பெற்றுக்கொண்டதுப் போல நாங்களும் பொறுமையோடு ஓட உதவி செய்யுங்க. ஆமென்..**






# தைரியத்தோடு ஓடு

அப்போஸ்தலர். 16: 24 - 34



பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் சங்கிலியினால் கட்டப்பட்டிருந்த போதும் அவர்கள் தைரியத்தோடு தேவனை துதித்து பாடினார்கள் அப்பொழுது சங்கிலிகள் தெறிப்பட்டு விடுதலையானார்கள் அதேபோல் நாமும் எல்லா காரியங்களிலும் தைரியத்தோடு செயல்படுவோம், வெற்றியை சுதந்தரிப்போம்.

மனப்பாட வசனம்

**பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**

2 தீமோத்தேயு.1:7

# நான் தைரியமாய் ஓடுவேன்

## ஜெபம்



அன்புள்ள இயேசுவே, பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் தைரியத்தோடு பாடி துதித்தது போல நாங்களும் தைரியத்தோடு செயல்பட உதவி செய்யுங்க.. ஆமென்.

# பாவத்தை விட்டு ஓடு




லூக்கா. 19: 1 - 10



சகேயு அநியாயமாய் வரி வசூலிப்பதின் மூலமாக
பாவத்தில் வாழ்ந்துக் கொண்டு இருந்தான். அவன்
ஒரு நாள்  எப்படியாகிலும் இயேசுவை பார்க்க வேண்டும் என்று
முயற்சி செய்து காட்டத்தி மரத்தில் ஏறி இயேசுவைப் பார்த்தான்.
அப்பொழுது இயேசு அவன் வீட்டிற்கு சென்றார். அப்போது சகேயு
தன்னுடைய பாவங்களை எல்லாம் அறிக்கையிட்டு தான்
அநியாயமாய் வாங்கினதை
நாலு மடங்காக திரும்பக் கொடுத்து  இரட்சிப்பை
பெற்றுக்கொண்டான். இதைப்போல் நாமும் பாவத்தை விட்டு ஓடி
வெற்றியை பெற்றுக்கொள்ளுவோம்.

## மனப்பாட வசனம்

**என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.**

சங்கீதம் 51. 2

## தேவன் வெறுப்பது பாவம்

## ஜெபம்

அன்புள்ள இயேசுவே, நீர் உங்களுக்குத் தந்திருக்கின்ற இந்த வாழ்க்கையில் பாவமில்லாமல் ஓடி ஜெயிக்க உதவி செய்யுங்கப்பா.. ஆமென்.



# பெற்றுக்கொள்ளத்தக்க ஓடு




ஆதியாகமம். 26: 18 - 26



ஈசாக்கு துரவுகளை தோன்டுகிற நேரத்தில் அவனுக்கு எதிராக பல சதி திட்டங்கள் நடந்தது ஆனால் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு தொடர்ந்து ஓடி சுதந்திரமான இடத்தைப் (ரெகோபோத்) பெற்றுக்கொண்டான். நாமும் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு தொடர்ந்து ஓடினால் வாழ்வில் ஜெயம் பெறலாம்







மனப்பாட வசனம்

**நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.**

1 கொரிந்தியர் 9. 24




# சாதிப்பேன்

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, நாங்கள் ஏதாவது உங்கள் இடத்தில் இருந்து பெற்றுக்கொள்ள தக்கதாக ஓட கிருபை செய்யுங்க. இயேசுவின் மூலம் ஜெபம் கேளும் நல்ல பிதாவே. ஆமென்!



# வாழ்ந்துகாட்டிட ஓடு

6



ஆதியாகமம். 37- 42



**யோசேப்புக்கு தேவன் கொடுத்த தரிசனத்தை தன் பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் சொன்னதினிமித்தம் யோசேப்பு எல்லாராலும் ஒதுக்கப்பட்டான். சகோதரர்களால் எகிப்துக்கு விற்கப்பட்டு பலவித சோதனைகளை சந்தித்தான். ஆனாலும் யோசேப்போடு கர்த்தர் இருந்ததினால், யோசேப்பை எகிப்துக்கு அதிபதியாக்கி அவனை இகழ்ந்த அவன் சகோதரர்களுக்கு உதவி செய்யும்படியாக வைத்தார்.**



மனப்பாட வசனம்

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்**

1 தீமோத்தேயு. 6: 12



# நான் எடுத்துக்காட்டாக வாழ்வேன்



## ஜெபம்



**அன்புள்ள இயேசப்பா, யோசேப்புக்கு தீமை செய்த சகோதரர்களை அவன் மன்னித்து, உதவி செய்தது எடுத்துக்காட்டாக வாழ்ந்தது போல நாங்களும் எடுத்துக்காட்டாக வாழ உதவி செய்யுங்க.. ஆமென் .**

# ஜீவகிரீடத்தை பெற ஓடு

 லூக்கா 23. 33- 46






**“சிலுவை சுமப்பது கடினமாயிருந்தாலும், இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவை சுமந்து மரித்து உயிர்த்தெழுந்து ராஜாதி ராஜாவாக இருக்கிறார். நாமும் இயேசு கிறிஸ்து காட்டின பாதையில் வாழ்ந்தால் நமக்கு ஜீவகிரீடம் உண்டு”.**



மனப்பாட வசனம்

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்**

1 தீமோத்தேயு. 6: 12



**நா**
**ன்**

# ஜீவ கிரீடத்தை

**பெற்றுக்கொள்ளுவேன்**



## ஜெபம்

**அன்புள்ள இயேசப்பா நாங்களும் உங்களை போல ஜீவ கிரீடத்தை நோக்கி ஓட உதவி செய்யுங்க.. ஆமென்.**

